முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 25.02.2026.

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>
<u>அசல் வழக்கு எண். 68/2024</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேட்டு | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | எல்லப்பன் | வயது | : | 51 |
| ஊர் | : | சிறுவேலியநல்லூர் | தொழில் | : | விவசாயம் |

<u>பி.வா.சா. 1 (சேட்டு): வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

என் தகப்பனார் பெயர் எல்லப்பன் என்றால் சரிதான். நானும் கண்ணனும் அண்ணன் தம்பி என்றால் சரிதான். எல்லப்பனின் அண்னன் பெயர் என்னவென்றால் பெருமாள் ஆகும். பெருமாளின் பிள்ளைகள்தான் கன்னியப்பன், செல்வம், ஆறுமுகம் ஆகும். இவ்வழக்கில் கன்னியப்பன் என்பவர்தான் வாதி என்றால் சரிதான். தாவா சொத்தும் வீடு வீட்டு மனை ஆகிய அனைத்து சொத்துக்களும் எல்லாப்பன் மற்றும் பெருமாள் ஆகியோர்களின் தந்தையான எட்டியாவுக்கு சொந்தமானது என்று சொன்னால் சரிதான். மேற்படி எட்டியா இறந்தபிறகு எல்லப்பன் மற்றும் பெருமாள் ஆகியோர்களுக்குத்தான் வந்தடைந்தது என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தும் வீடு வீட்டு மனை ஆகியவற்றை எல்லப்பனும் பெருமாளும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2. மேற்படி எல்லப்பனும் பெருமாளும் அவர்களின் காலத்தில் தாவா சொத்தும் வீடு வீட்டு மனை ஆகியவற்றை வாச்சா பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இருவரும் பாகப்பிரிவினை பெற்ற சொத்தினை தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். பெருமாள் பாகத்திற்கு வந்த சொத்தானது வாதி மற்றும் அவருடைய சகோதரர்களுக்கு வந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்துதான் வழக்கு அ செட்யுல் சொத்தாகும். என் தந்தை எல்லப்பன் என்பவரிடம் கிடைக்கப்பபெற்ற சொத்ததான் வழக்கு ஆ செட்யுல் சொத்தாகும். எனக்கும் கன்னியப்பனுக்கும் பிரிக்கப்பட்ட சொத்தானது சம பாதியாக பிரிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஊரில் கிழக்கு பக்கம்தான் தாவா சொத்தானது அமைந்துள்ளதா என்றால் வடக்கில் அமைந்துள்ளது.

3. வழக்கு சொத்தில் முதல் 2 துண்டுகள் கன்னியப்பனுக்கும், கண்ணனுக்கும் உடையது என்று சொன்னால் சரிதான். அடுத்த 2 துண்டுகள் கண்ணனுக்கும் செல்வத்துக்கும் உடையது

ஆகும். அடுத்த 2 துண்டுகள் கன்னியப்பனுக்கும் செல்வத்துக்கும் உடையது. கிணறு பாகமானது 2 துண்டுகள் தள்ளிதான் உள்ளது. கிணறை ஒட்டி அனைவருக்கும் 5 பாகமாக பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால' சரியல்ல. கிணறு பாகத்தை தாண்டி அடுத்து உள்ள 2 துண்டுகளும் எனக்கு உடையது என்று சொன்னால் சரிதான். அதன்பிறகு ஆறுமுகம் எனக்கும் கன்னியப்பனுக்கும் உள்ளது. கிணறு பாகத்திற்கு முதல் 2 துண்டுகள் தாண்டியும் கடைசியில் உள்ள 3 துண்டுகள் தாண்டியும்தான் செல்லமுடியும் என்று சொன்னால் சரியல்ல. நிலத்தின் வழியாகவும் நிலத்தினை சுற்றி புறம்போக்கு நிலம் வழியாகவும் செல்ல வழி உண்டு.

4. பாகப்பிரிவினை செய்வதற்கு முன்பு நிலத்தின் வழியாகத்தான் சென்று வந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. புறம்போக்கு வழியாகத்தான் நிலத்திற்கு சென்று வருவோம். மேற்படி புறம்போக்குதான் ஏரியாக உள்ளது என்றால் சரியல்ல. நிலத்திற்கு எந்த பக்கத்தில் ஏரி உள்ளது என்றால் கிழக்கு பக்கத்தில் உள்ளது. நிலத்திற்கு மேற்கு பக்கம் வேறு ஒருவரின் நிலம் உள்ளது. வடக்கில் சண்முகப்பிள்ளை என்பவரின் நிலம் உள்ளது. தெற்கில் இளங்கோ என்பவர் நிலம் உள்ளது. நான் சொல்வது பொய் என்றும் பாகப்பிரிவினை செய்வதற்கு முன்பு நிலத்தின் வழியாகத்தான் சென்றுவந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான்கு பக்கமும் சென்றுவர வழி இருந்தது. தற்போது நாங்கள் பயிர் வைப்பதில்தான் அவர்கள் நிலத்தின் வழியே சென்றுவருகிறார்கள். நான் பொய் சொல்கிறேன் என்றும் வழக்கமாக ஒரு நிலத்தில் மீதுதான் இன்னொருவர் நிலத்திற்கு சென்று வருவர் என்றும் நான் வாதியின் மீது உள்ள விரோதத்தில்தான் பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா அ செட்யுல் சொத்தை அடைவதற்கு சுரேஷ், கண்ணன், இளங்கோ ஆகியவற்களின் நிலத்தை தாண்டிதான் செல்லவேண்டும் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதி அ அயிட்ட சொத்துக்கு செல்வதற்கு பி அயிட்ட சொத்து வழியாகத்தான் செல்லமுடியும் என்றால' சரியல்ல. 4 பக்கமும் வழி உண்டு. நடுவில் இருக்கும் சொத்திற்கு பி செட்யுல் சொத்து வழியாகத்தான் செல்லமுடியும் என்றால் சரியல்ல. ஊரில் உள்ள வீடு மற்றும் வீட்டு மனை சொத்துக்கள் என்னுடைய தாத்தாவான எட்டியப்பனுக்கு சொந்தமானது என்றாலவ் சரிதான். அவருடைடிய காலத்திற்கு பிறகு என் தந்தை எல்லப்பனும் அவரின் சகோதரர் பெருமாளும் அனுபவித்து வந்தனர் என்றால் சரிதான். இன்று வரை மேற்படி வீட்டின் மனையிலுள்ள பட்டாவானது யார் பெயரில் இருக்கிறது என்றால் தாத்தா எட்டியப்பன் பெயரில் இருந்து வருகிறது.

5. மேற்படி வீடு மற்றும் வீட்டு மனையில் கன்னியப்பன் வகையறா ஆகியோர்கள் தங்களுக்கு உரிமை உள்ளது என்று பாகப்பிரிவினை கேட்டு பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்தில் பாதி பாகம் கொடுக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்தானது கொட்டா எரிப்பதற்கு முன்பாகத்தான் நடைபெற்றது என்றால் சரிதான். கன்னியப்பனுக்கு பாதி பாகம் கொடுக்கப்படவேண்டும் என்று சொன்னதால்தான் நானே கொட்டாயை எரித்துவிட்டேன் என்றால் சரியல்ல. நானே கொட்டாவினை எரித்துவிட்டு காவல் நிலையத்தில் ஒரு பொய் புகாரினை கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி போலிசார்கள் புகாரினை பெற்றுக்கொண்டு

விசாரணை செய்தார்கள். ஆனளால் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரானது பொய் என்பதால்தான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் அதன்பிறகு பஞ்சாயத்து முன்னிலையில் இதுபோன்று எதுவும் செய்யமாட்டோம் என்று கூறினார்கள். மேற்படி பஞ்சாயத்து முன்னிலையில் வாதிகள் அதுபோன்று எதுவும் சொல்லவில்லை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் மன்னிப்பு கோரியதன் அடிப்படையில் நாங்கள் வழக்கினை வாபஸ் பெற்றோம். நான் சொல்வது பொய் என்றும் அவ்வாறு வாபஸ் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வீட்டின் மீது பிரச்சனை இருந்ததால்தான் நான் பி செட்யுல் வழியாக ஏ செட்யுல் சொத்திற்கு செல்வதை வாதியை நான் தடுத்ததால்தான் இந்த வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி சுரேஷ், கண்ணன், இளங்கோ ஆகியோர்களை வழக்கில் சாட்சியாக விசாரிப்பதற்கு தயாராக உள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் அனைவரும் வெளியூரில் வசித்து வருகிறார்கள்.

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.02.25 17:06:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு